# நீதிபதிகள் குழாம் முன்னர் தமிழ்த் தலைவர்கள்


சுதந்திரன்
SUTANTIRAN


★ விலை சதம் 35 வ.ஆ. 2007 ஆனி 17, ஐ. ஆகிர் 17, (16-6-76) புதன் புத்தகம் 30 இதழ் 16


### புற்றுநோய் சிகிச்சை நிலையங்கள் நிறுவுவதிலும்

# தமிழ் ஈழம் புறக்கணிப்பு!

அண்மையில் காலியில் ஒரு கான்சர் 'கிளினிக்' திறந்துவைக்கப்பட்டுள்ளதாம். காலியில் அல்ல களுத்துறையிலும், கந்தாளையிலும், ஏன் ஒவ்வொரு சிங்கள ஊரிலும் திறந்துவைக்கட்டும். அதைப் பற்றி எமக்கு எதுவித ஆட்சேபமுமில்லை. ஏனெனில் கான்சர்வியாதி ஒரு கொடிய நோய்; அதை ஆரம்பத்திலேயே கண்டுபிடிப்பது மக்கள் அதற்குப் பலியாகாமல் இருப்பதற்கு வழி செய்யும். இங்ஙனப் பகுதிகளில் கிளினிக்குகள் மாத்திரமல்ல சில சிகிச்சை நிலையங்களையே ஏற்படுத்தினாலும் எமக்கு எதுவித ஆட்சேபனையும் இல்லை. நாட்டில் பல சிகிச்சை நிலையங்களை நிறுவவேண்டும் என்பதே எமது விவாதம்.

ஆனால், சிகிச்சை நிலையங்கள் அவசியம் நிறுவப்படவேண்டும் என்று இலங்கை அரசாங்கமே இங்கு அழைத்திருந்த வெளிநாட்டு நிபுணர்களே சிபாரிசு செய்திருக்கும் யாழ்ப்பாணம் போன்ற தமிழ்ப் பகுதிகளில் ஒரு 'கிளினிக்' ஆவது இன்னும் நிறுவப்படாதது ஏன்?



சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் ஆரம்பிக்கப்பட்ட காலி கான்சர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க காலியில் இந்தக் கிளினிக் நிறுவப்பட்டுள்ளதாம்! ஆனுல் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு அன்றிலிருந்து மக்களுக்குத் தொண்டாற்றி வரும் யாழ்ப்பாணக் கான்சர் சங்கத்தின் வேண்டுகோளை இந்த நாட்டு அரசாங்கம் நிறைவேற்ருமல் இருந்து வருவதேன்?

இலங்கையில் கான்சர் சிகிச்சை நிலையம் அமைந்துள்ள மகாரகமையிலிருந்து சுமார் 70 மைல் தொலைவிலுள்ள காலியில் ஒரு கிளினிக்கை நிறுவியுள்ள இந்த நாட்டு அரசாங்கம் மகாரகமையிலிருந்து 200 மைல்களுக்கு மேல் தொலைவில் உள்ள யாழ்ப்பாணம், மன்னூர், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய தமிழ்ப் பிரதேசங்களில் ஒன்றில்

—2-ம் பக்கம் பார்க்க

## கொழும்பில் கருத்தரங்கு

தமிழர் கூட்டணியின் கொழும்புக் கிளையின் சார்பில், கொழும்பில் உள்ள தந்தைசெல்வாவின் இல்லத்தில் வாரந்தோறும் நடைபெறும் கருத்தரங்கு எதிர்வரும் புதன்கிழமை(16-6-76) மாலை 6-30 மணிக்கு கிளைத் தலைவர் சழவேந்தன் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் Trial at Bar எம் தலைவர்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகளை சட்ட அடிப்படையில் விளக்குவார்.

# நாளை மறுதினம் தோன்றுவர்!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு அ. அமிர்தலிங்கம் அவர்களும் கூட்டணிப் பா. உ.க்களான திருவாளர்கள் வி. என். நவரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம் ஆகியோரும் பிரதம நீதி அரசரால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் குழுமுன் நாளை மறுதினம் (18 6 76 வெள்ளிக்கிழமை) கொழும்பில் தோன்றுகிருர்கள். இத்தினத்தில் தலைவர்களிடம் குற்றப்பத்திரிகை ஒப்புவிக்கப்படும்.

இந்நீதிபதிகள் குழுவில் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு ஜே எப். ஏ. சொயிஸா (தலைவர்) சிலாபம் மேல் நீதிமன்ற நீதிபதி திரு சிவா செல்லையா, நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு ஆனந்த ஜி. டி. சில்வா ஆகியோர் அங்கம் வகிக்கிருர்கள்.

அண்மையில் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ் ஈழம் சம்பந்தமான அரசியல் பிரகடனத்தை துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு கடந்த மே 22ந் தேதி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பொதுமக்களுக்கு விநியோகித்ததும், திருகோணமலை-மட்டக்களப்பு-மன்னூர் - வவுனியா-கல்முனை - யாழ்ப்பாணம் ஆகிய ஆகிய ஆறு இடங்களில் ஒரே சமயத்தில் இந்த இயக்கம் நடைபெற்றதும், யாழ்ப்பாணத்தில் மட்டும் திருவாளர்கள் அ அமிர்தலிங்கம், பண்டிதர், கா. பொ. இரத்தினம், வி என். நவரத்தினம், க. துரைரத்தினம் ஆகியோர் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே.

கொழும்பு கொண்டுவரப்பட்டு சி. ஐ. டி. முகாமொன்றில் தடுத்து வைக்கப்பட்டனர். இதே சமயத்தில் தமது தலைவர்களை விடுதலை செய்யக்கோரி தமிழ் மக்கள் ஹர்த்தால் நடாத்தி எதிர்ப்புத் தெரிவித்தனர். அதைத்

2-ம் பக்கம் பார்க்க



## வி. என். மீதே முதல் விசாரணை?



கைது செய்யப்பட்ட தமிழ்த் தலைவர்கள்





# தூக்கில் தொங்கவும் தயார்!

மற்றொரு மொழிக்குக் கேடு பயக்காது சிங்கள மொழியுடன் தமிழ்மொழிக்குச் சம உரிமைவேண்டும் எனப் போராடுவது தேசத்துரோகமானுல்—எமது மரபுவழித் தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு மூதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்கப் போராடுவது தேசத்துரோகமானுல்—இந்த நாட்டையே தாயகமாகக்கொண்டு அதன் வருவாயின் நூற்றுக்கு அறுபது சத வீதத்தை நல்கும் தமிழ்த்தொழிலாளர்களது வாக்குரிமை, வாக்குரிமைக்கு போராடுவது தேசத்துரோகமானுல் — இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பை மாற்றி ஓர் அரசியல் அமைப்புக்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத்துரோகமானுல்—இத்தனை தேசத்துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு அனுபவிப்பேனே ஒழிய எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழித்துப் பழிக்கப்பட்டு சிதைந்து சீரழிந்து, அதுகாலப் போக்கில் அழிந்துபோவதைச் சகிக்கமாட்டேன்! இனத்தின் உரிமைக்காகப் போர் தொடுப்பதால் தேசத்துரோகியெனக் குற்றம் சாட்டப்பட்டுத் தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படுவதையே நான் வரவேற்கிறேன்.

—வன்னியசிங்கம்.

1952ல் பாராளுமன்றத்தில் கூறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

## தொடர் (2)

# தடுப்புக்காவலில் பத்து நாட்கள்

நாங்கள் ஈழநாட்டு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு மானிப்பாய்வீதி காங்கேசன்துறை வீதிச் சந்தியை அடைந்து காங்கேசன்துறை வீதி வழியாகத் தெற்குமுகமாகச் சென்றோம். துண்டுப் பிரசுரங்களை நாங்கள் மக்களுக்குக்கொடுப்பதைப் பார்த்துக்கொண்டு ஒரு 'ஜீப்' வண்டி நிறைந்த பொலிசார் எங்களைக் கடந்து சென்றனர். சத்திரச் சந்தி வரையும்சென்று கொடுத்து விட்டுப் பழைய சந்தையின்முன் பகுதியில் கூட்டமாக நின்ற மக்களுக்கும்கொடுத்தோம். இதனை அருகில் வந்து நின்ற ஜீப்வண்டியிலும், பார வண்டியிலும் இருந்தபொலிசார் நன்கு கவனித்துக்கொண்டிருந்தனர்.

"பொலிசார் தலையிடவில்லையே; எங்களைக் கைது செய்யவில்லையே" என்ற பெருங்கவலையுடன் நாங்கள் அவ்விடத்திலிருந்து வசுக்காலையை நோக்கிப் புறப்பட்டோம். "இராணி" படமாளிகையைக் கடந்த பின் தந்தை செல்வநாயகத்தையும் அவரைச் சுற்றி மக்கள் கூடி நிற்பதையும் கண்டோம். திரு: அமிர்தலிங்கத்தையும் திரு. நவரத்தினத்தையும் பொலிசார் அழைத்துச்சென்றனர் என்று மக்கள் சிலர் எங்களிடம் கூறினர்.

பின்னர் நாங்கள் அவ்விடத்திலிருந்து வசுக்காலையின்எல்லைப்பகுதியில்தெற்கு நோக்கிச்சென்றோம். திரு. துரைரத்தினம் துண்டுப் பிரசுரத்தை வாசித்துகொண்டு நின்றார். மக்கள் பலர் அவரைச் சுற்றிக் குழுமி நின்றனர். அவரைக் கடந்து முப்பது யார் தூரம் வரை சென்று நாங்களும் அங்கு நின்று துண்டுப் பிரசுரத்தை வாசிப்பதற்கு முடிவு செய்தோம். நாங்கள் கொண்டு சென்ற துண்டுப் பிரசுரங்களில் ஐந்தோ ஆறோ துண்டுப் பிரசுரங்கள் மட்டுமே கையிலிருந்தன. ஏனையயாவும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. மேலும் கொடுப்பதற்குத் துண்டுப் பிரசுரங்கள் இல்லாமையால் அங்கு நின்ற பெருந்தொகையான மக்களின் ஆர்வத்தினாலும் எழுச்சியினாலும் உந்தப்பட்டு அவர்களிற் பலர் விரும்பியபடி திரு சிவசிதம்பரம் துண்டுப் பிரசுரத்தை வாசித்தார். நான் ஒரு பக்கத்திலும், மற்றைய பக்கத்தில் திரு தருமலிங்கமும் நின்றோம். அவர் வாசிப்பதைப் பொலிசார் கவனித்தனர்; எனினும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர் வாசித்து முடித்தபின் நாங்கள் நின்ற இடத்திலிருந்து பத்துப்பதினைந்து யார் தூரம் தெற்கே சென்று நாங்கள் மூவரும் நின்றோம்: நான் துண்டுப் பிரசுரத்தை வாசித்தேன், மக்கள் பலர் கேட்டுக்கொண்டு நின்றனர். சிறிது நேரத்தின்பின் அங்கு வந்த பொலிசார் திரு மு. சிவசிதம்பரத்தைக் கூட்டிச் சென்றனர். அப்பொழுது மக்கள் பலர் ஆரவாரஞ்செய்தனர்.

பின்னர் அங்குநின்ற திரு ஆலால சுந்தரத்தை நாங்கள் துண்டுப்பிரசுரம் கொடுக்கும் நோக்கத்தையும், துண்டுப் பிரசுரத்திலுள்ள விடயத்தையும் பற்றிப் பேசுமாறு திரு தருமலிங்கம் கேட்டார். அப்பொழுது திரு கி. கதிரவேற்பிள்ளை அங்குவந்தார். "திரு சிவசிதம்பரத்தை மட்டுமே பொலிசார் அழைத்துச் சென்றனர் எங்களைக் கவனிக்கவில்லை. நாங்கள் பன்னிரண்டு மணி வரை அங்கு நின்று பிரசாரம் செய்யப்போகிறோம்" என்று திரு தருமலிங்கமும் நானும் அவரிடம் கூறினோம். அவர் 'திரு துரைரத்தினத்தையும் பொலிசார் கைது செய்துளர். நீங்கள் சிறிது நேரம் இங்கு நின்றுவிட்டு அலுவலகத்துக்கு வாருங்கள்' என்று கூறிவிட்டு சென்றார்.

அவர் சென்றபின் இரண்டு மூன்று நிமிடங்களுள் பொலிசார் ஜீப்வண்டியிலும் பாரவண்டிலும் அங்கு வந்தனர். ஜீப் வண்டியில் வந்த யாழ்ப்பாண உதவிப் பொலிசு கண்காணிப்பாளர் திரு. பெரேரு என்னிடம் வந்து என்னைக் கைதுசெய்வதாக ஆங்கிலத்தில் கூறினார். "நாங்கள் உங்களை எதிர்பார்த்துக் கொண்டுதான் நிற்கிறோம்" என்று கூறிக்கொண்டு நான் அவருடன் சென்று அவர் வந்த ஜீப் வண்டியில் ஏறினேன். மக்கள் என்னையும் 'ஜீப்'வண்டியையும் சுற்றி வளைத்துக் கொண்டனர். ஜீப்வண்டியைச் சீருடை அணிந்த பொலிசார் ஒருவர்செலுத்தினார். "நாங்கள் அகிம்சை வழியில்போராடுபவர்கள், எனவே நீங்கள் ஆரவாரஞ் செய்யப்படாது; அமைதியாக வழிவிடுங்கள்" என்று நான் மக்களுக்குக் கூறினேன். உதவிப்பொலிசுக் கண்காணிப்பாளரும் தம்முடைய சாரதியைப் பதட்டமடையாது அமைதியாகச் 'ஜீப்'பைச்செலுத்துமாறு கூறினார். ஜீப்பில் எங்கள் மூவருடன் பொலிஸ் உதவிப்பரிசோதகர் தாமோதரம்பிள்ளையும் வேறுமூன்று பொலிசாரும் இருந்தனர். வசுக்காலையிலிருந்து ஒருவாறு மக்களின் முற்றுகையை விலக்கி, வைத்தியசாலை வீதியை அடைந்து யாழ்ப்பாணம்பொலீசு நிலையத்தை நோக்கிச்சென்றோம், வீதிகளின் இருமருங்லும் நின்ற மக்களும், சென்ற மக்களும் எங்களை வைத்த கண் அசையாமல் பார்த்துக்கொண்டு நின்றனர். பொல்சார் எங்களைக் கைதுசெய்து அழைத்துக்கொண்டு செல்கின்றனர் என்பதை அவர்களிற் பலர் அறிவார்கள்; சிலர் கை அசைத்துத் தங்கள் பரிவை வெளிப்படுத்தினர்.

நான் சென்ற ஜீப்வண்டி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குள் செல்லவில்லை. பொலிஸ் நிலையத்துக்குச் சில யார் தூரத்தில் நின்றது; அப்பொழுது உதவிப் பொலிசுக் காண்காணிப்பாளர் வசனெளி வாயிலாகப் பாரவண்டி ஒன்றின் பதிவிலக்கத்தைக்கூறி அந்த வண்டியை எங்கள் ஜீப்பினைப் பின்தொடருமாறு பணித்தார். இந்தப் பாரவண்டி நிறையப் பொலிசார் இருந்தனர். என்னைக் கைது செய்யவந்த ஜீப்வண்டியுடன் வந்த இந்தப் பாரவண்டி முன் செய்யப்பட்ட ஒழுங்கின்படி ஜீப் வண்டியின் பின் வந்திருக்க வேண்டும். அது அவ்வாறு செய்யாமல் முன்னரே போய்விட்டது என்று அறிந்தேன். மக்கள் கூட்டத்தையும் அவர்களுடைய ஆரவாரத்தையும் கண்டவுடன் பாரவண்டியும் அஞ்சி அகன்றதுபோலும்!

பொலிசார் பத்துப்பன்னிரண்டு பேரைக் கொண்ட பாரவண்டியை நான் சென்ற ஜீப்பின் பின்வருமாறு பணித்தபின் ஜீப்பில் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். "பலாலி விமானநிலையத்துக்குச் செல்லுவதாகவும் அங்கிருந்து விசேட வானூர்தியில கொழும்புக்கு எங்களை அழைத்துச் செல்வார்கள் எனவும்" திரு பெரேரு எனக்குக் கூறினார்.

நாங்கள் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் சென்று கோயில் வீதி வழியாகப் பலாலி இராணுவ முகாமிலுள்ள ஒரு கட்டடத்தை அடைந்தோம். பலாலி வீதியிலுள்ள சந்திகள் யாவற்றிலும் ஆயுதம் ஏந்திய பொலிசார் பலர் காட்சி அளித்தனர். எங்களுக்காகக் கொளுத்தும் வெயிலில் நின்ற அவர்களைப் பார்த்த பொழுது பரிதாபமாகவிருந்தது.

பலாலிக் கட்டடத்துக்கு நான் சென்ற பொழுது அங்கு திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வ. ந. நவரத்தினம், க. துரைரத்தினம், மு. சிவசிதம்பரம் என்போருடன் மூன்று தொண்டர்களும் சில பொலிசு உத்தியோகத்தர்களும் இருந்தனர்; நண்பர்கள் என்னை வரவேற்றனர். பின்னர் எங்களுடைய வாக்குமூலங்கள் பதியப்பட்டன, தமிழிலே எழுதுமாறு நாங்கள் வற்புறுத்தினோம். உதவிப் பொலீசுக் கண்காணிப்பாளர் திரு தருமராசாவும் திரு. தாமோதரம் பிள்ளையும் தமிழில் எழுதினார்கள். எனது வாக்குமூலத்தை ஜீப்பில் என்னுடன் தொடர்ந்துவந்த திரு தாமோதரம்பிள்ளை எழுதினர்.

சி.61ஆம் இலக்கக் கட்டடத்தில் தடுத்து வைக்கவேண்டுமென யாழ்ப்பாண பொலிசுக் கண்காணிப்பாளராகிய அடிற்யபால சுமணசிறீ செனிவிரத்தினவாகிய நான் கட்டளை பிறப்பிக்கின்றேன்." எனக் கூறப்பட்டிருந்தது.

திரு: மு. சிவசிதம்பரத்துக்குத் தடுப்புக் காவல் கட்டளை கொடுக்கப்படவில்லை; இதற்குப் பல நொண்டிச் சாட்டுக்கள் பொலிசாரால் கூறப்பட்டன. அவர் "குற்றஞ்" செய்ததைத் தாம் காணவில்லை எனப் உத்தியோகத்தர் ஒருவர் கூறினார்; திரு. சிவசிதம்பரத்திடம் துண்டுப் பிரசுரங்கள் அப்பொழுது இருந்தன. இந்த உண்மையும் அங்கு கட்டிக் காட்டப்பட்டது. எனினும், இதனையும் பொலிசு உத்தியோகத்தர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை பொலிசு உத்தியோகத்தரின் பேச்சும் போக்கும் எனக்கு ஒரு சந்தேகத்தை உண்டாக்கின: தமிழரசுக்கட்சித் தலைவர்களையே கைது செய்யும்படி

### பண்டிதர் கா. பொ. இரத்தினம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் மாநாட்டுத் தீர்மானத்தைகொண்ட துண்டுப் பிரசுரத்தை நாங்கள் வழங்கினோம்; வாசித்தோம் என்று எங்கள் வாக்குமூலங்கள் பதியப்பட்டபின் யாழ்ம்பாணம் பொலிசுக் கண்காணிப்பாளர் ஏ. எஸ். செனவிரத்தினவும் பிரதிப் பொலிசுப் பரிசோதகர் நாயகம் ஆனல் செனவிரத்தினவும் அங்கு வந்துசேர்ந்தனர், எங்கள் நால்வருக்கும் (திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வ. ந. நவரத்தினம் திரு. க. துரைரத்தினம் கா. பொ. இரத்தினம்) தடுப்புக் காவல் கட்டளையை பொலிசுக் கண்காணிப்பாளர் கொடுத்தார். ஆங்கிலத்தில் வரையப்பட்ட இந்தக் கட்டளையில் "அவசரகாலச் சட்டங்கள் சிலவற்றை மீறித் துண்டுப் பிரசுரங்களை வழங்கியதாகவோ, துண்டுப் பிரசுரங்களை வைத்திருந்ததாகவோ சந்தேகப்படுதற்குப் போதிய காரணங்களிருப்பதால் பிடி ஆணையின்றிக் கைதுசெய்யப்பட்ட கா. பொ. இரத்தினத்தை 5-6-76வரையும் கொழும்பு-5 இல் பசெற் வீதியிலுள்ள

தான் அரசாங்கம்—பிரதம அமைச்சர் கட்டளையிட்டார் என்பதே அந்தச் சந்தேகம். இதனைப் பின்னர் நான் நண்பர்களுக்கும் கூறினேன். பிரதம அமைச்சர் தம்புலையில் பேசும்பொழுது எங்களைக் கைது செய்தமை பற்றிக் குறிப்பிட்டார். அவருடைய பேச்சில் தமிழரசுக் கட்சித் தலைவர்களையே கைது செய்யுமாறு அவர் கட்டளையிட்டிருந்தார் என்பது மிகு தெளிவாகப் புலப்பட்டது. கைது செய்யப்படவேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலும் பிரதம அமைச்சரைக் கலந்து ஆக்கப்பட்டதென்பதில் சந்தேகமில்லை: இந்தப் பட்டியலில் திரு சிவசிதம்பரத்தின் பெயர் இல்லை. அகில இலங்கைக் காங்கிரசைச் சேர்ந்தவர்களை எங்களுடன் சேர்த்துக் கைது செய்வதில்லை என்ற கொள்கையை அரசாங்கம் உறுதியாகக் கடைப்பிடித்தது. இந்தப் பிரித்தாளும் தந்திரத்தைப் பிரதம அமைச்சரின் பேச்சு நன்கு புலப்படுத்தியது.

[தொடரும்]

# யாழ் அதிபர் பிரதம அதிதியாக அழைக்கப்படமாட்டார்

## மாணவிகள் பிரகடனத்தால் தலைமைப்பீடம் தீர்மானம்!

18-6-76 வெள்ளியன்று வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவிருக்கும் விளையாட்டுப்போட்டிகளில் பிரதம அதிதியாக யாழ் அரசாங்க அதிபர் அழைக்கப்பட இருந்ததை ஆட்சேபித்து கல்லூரியின் தன்மானமுள்ள தமிழ் மாணவிகள் மேற்படி விளையாட்டுப் போட்டியை பகிஷ்கரிக்க முடிவுசெய்துள்ளனர் என்ற செய்தியை 13-6-76 சுதந்திரன் வெளியிட்டிருந்தது,

மாணவிகளின் இந்தப் பகிஷ்கரிப்புப் பிரகடனத்திற்கு அஞ்சிய கல்லூரித் தலைமைப்பீடம் அன்றைய பிரதம அதிதியாக, பிரதம கல்வி உத்தியோகத்தர் திரு. ஏ. சிவானந்தா அவர்களை அழைக்கத் தீர்மானித்திருப்பதாக அறியப்படுகின்றது. எனினும் கல்லூரித் தலைமைப்பீடம் மறுபடியும் அரசாங்க அதிபரையே பிரதம அதிதியாக அழைக்கத் தீர்மானிக்குமானல் பகிஷ்கரிப்பை நடத்தியே தீருவதென மாணவிகள் தீர்மானித்துள்ளனராம். திருமதி சிவானந்தா பரிசில்கள் வழங்குவார்.

## புற்றுநோய்...

—1-ம் பக்கத் தொடர்

ஒரு கிளினிக்கை நிறுவ முன் வராதது ஏன்?

இப்பகுதிகள் தமிழ்ப் பகுதிகள், கேட்பவர்கள் தமிழர்கள் என்பதினாலா?

தமிழர்கள் சிங்களவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லாரையும் சமமாக நடத்தி வருகிறோம் என்று பிரசாரம் செய்துகொண்டு வரும் சிங்கள அரசாங்கம் நடந்துகொள்ளுகின்றவிதம் இதுதான்!

## நீதிபதிகள் குழாம் முன்னர் தமிழ்த்....

—1-ம் பக்கத் தொடர்

தொடர்ந்து மே 31ந் தேதி தலைவர்களை விடுதலை செய்த அரசாங்கம் அவர்களுக்கெதிராகச் சாட்டப்பட்ட குற்றப்பத்திரிகையை உயர்நீதி மன்றத்தில் ஒப்புவித்தது.

இவர்கள் மீது மொத்தம் ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதாகவும் [illegible] இந்நால்வரிலும் [illegible] சேர்ப்பா ட. திரு. வ். என். நவரத்தினம் அவர்களே [illegible] தக்கொள்ளப்படுவார் என்றும் நம்பத்தகுந்த உயர் வட்டாரங்களில் பேசப்படுகின்றன.

திரு: வி. என். நவரெத்தினம் அவர்களே அண்மையில் அம்மையாரின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது, தமிழரசுக் கட்சியின் [illegible] உரையாற்றினார் [illegible] என்பதைத் தமிழ் மக்கள் இதற்குள் மறந்திருக்கமாட்[illegible]

18ந் தேதி ஆரம்பமாகும் இவ்வழக்கு தமிழ் ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது: இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களும் உலகமடங்கிலும் வாழும் தமிழ் மக்களும் இவ்வழக்கை ஆவலோடு எதிர்பார்க்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதனங்கள் ஏதுமில்லை - எங்கள் சாதனையின் மூலம்

# உலகறியச் செய்வோம்!

## கூட்டுச்சேரா மாநாட்டில் பங்குகொள்ளும் விடுதலை இயக்கங்களில்

# தமிழர் விடுதலை முன்னணியும் இடம்பெற வேண்டும்

எதிர்வரும் கூட்டுச்சேரா நாடுகள் மாநாடு எவ்வளவுக்கு எவ்வளவு அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து வருகின்றதோ அதற்கு எவ்விதத்திலும் குறையாத அளவிற்கு தமிழர் விடுதலை முன்னணியினரும் அது குறித்துச் சிரத்தைகொள்வது புரிந்துகொள்ளக்கூடியதே!

தமிழர் சிங்களவர் பிரச்சினை குறித்து இல்லாததையும் பொல்லாததையும் ஏன் புனைந்துரைகளைக்கூட உலக நாடுகள் முன் வைப்பதற்கு அரசாங்கத்திற்குச் சாதனங்கள் பல கைவசம் உண்டு. பொறுப்பேற்கப்பட்ட ஏரிக்கரைப் பத்திரிகைகள், அரசாங்க ஊதுகுழலான ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம், இவற்றிற்கும் மேலாக வெளிநாடுகளில் உள்ள தூதுவராலயங்கள், போதாதற்கு அடிக்கடி சடுதியில் அமைச்சர்கள், பிரதமர் உட்பட மேற்கொள்ளும் வெளிநாட்டுச் சுற்றுலாக்கள்.

எது எப்படியிருந்த பொழுதிலும் தமிழ்ப்பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே இருந்த சகல பிணக்குகளும் தீர்க்கப்பட்டு விட்டதாகக் கூறிவந்தவர்கள், சிறப்பாக புத்தளத்திலும் அடுத்துள்ள பகுதிகளிலும் நடைபெற்ற சம்பவங்களை அடுத்தும் பொதுப் படையாக தமிழர் கூட்டணி வட்டுக்கோட்டை மாநாட்டினையடுத்து தமிழர் விடுதலை முன்னணியாக மாறிய பின் ஆரம்பித்த சட்ட மறுப்பு, நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்தும் சற்றுச் சுறுசுறுப்படைந்துள்ளனர். முதலில் பிரச்சினைகளே கிடையாதென்று சாதித்தவர்கள், பிரச்சினைகள் யாவும் புதிய குடியரசுத் திட்டத்தால் சுமுகமான தீர்வு பெற்றுவிட்டன வென்று வலியுறுத்தியவர்கள் இப்போதே கூட்டுச்சேராநாடுகள் மாநாட்டை முந்திக்கொண்டு பிரச்சினைகளைப் பூசிமெழுக முனைந்துள்ளனர்.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு இந்துக்கல்லூரி வைபவத்தில் எழுதித் தயாரித்த தமது பேச்சில், பேசித் தீர்வு காணமுடியாத அளவுக்கு தமிழர் பிரச்சினைகள் மோசமானவையல்ல வென்று' பிரதமர் திருவாய் மலர்ந்துள்ளனர்.

தமிழர் கூட்டணியின் தலைவராக மூதறிஞர் செல்வா முன்வைத்த 6 அம்சகோரிக்கையை அசட்டை செய்த பிரதமர், அதனை விவாதிக்கத்தானும் பேச்சுவார்த்தைக்கு தமிழர் கூட்டணித் தலைமைப்பீடத்தை அழைக்காது மௌனம் சாதித்த பிரதமர், கூட்டுச்சேரா நாடுகள் மாநாடுகள் ஏற்படுத்தியுள்ள நெருக்கடியால் பேச்சுவார்த்தைகள் பற்றிப் பேசத் தலைப்பட்டுள்ளனர்.

பேச்சு வார்த்தைகளுக்கு அழைப்பு விடுக்கவேண்டியவர்கள் யாரை அழைக்க வேண்டுமோ அவர்களைப் பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பதற்கு பதிலாக மக்களால் தெரிவு செய்யப்படாத அமைதேயப்பேர்வழிகளை முடுக்கி 20 அம்சகோரிக்கைகள் பதினெட்டு அம்ச திட்டங்கள் என்று பலபடப் பேசவைக்கிறார்கள்.

தமிழ்ப்பேசும் மக்கள் சார்பாக தமிழ் மக்களின் பேச்சாளர்களாகப் புறப்பட்டிருக்கும் இப் புது முகங்கள் யார்? புது முகங்களாக அரசியலில் நடிக்கப் புறப்பட்டிருக்கும் பேர்வழிகளின் தயாரிப்பாளர்களாவது இவர்களை விரைவில் அரசியல் அரங்கிற்கு அறிமுகப் படுத்தி வைக்கக் கடமைப் பட்டுள்ளனர். இவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பது குணசித்திரபாகமா? அல்லது வெறும் அரசியல் கோமாளிகள் பாகமாவென்பதை ஆட்களைத்தெரிந்தால் பொது மக்கள் புரிந்துகொள்வார்கள். நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு புகழ் கோபாலபிள்ளை மகாதேவா புதிய அரசியல் நடிகர் குழுவில் ஒருவராக விரார் என எதிர்பார்ப்போம். அதேபோல் யாழ்ப்பாணம் வந்த பிரதமருக்கு நல்லூர் கந்தன் சந்நிதானத்தில் பாதம் கழுவியதாகக் கூறப்படும் இளைப்பாறிய அரசாங்க உதவி அதிபரும் ஒருவராக இருக்க மாட்டாரென்று எதிர்பார்ப்போம். வேம்படி மகளிர் கல்லூரி விளையாட்டுக்கு இன்னாரைத்தான் பிரதம அதிதியாக அழைக்க வேண்டுமென்று கல்லூரி அதிபரிடம் சிபார்சு செய்தவரே இவர்தானும்! இருவருமே பழைய முகங்கள் தாம்! அரசியல் கோமாளிகள் குழாமில் புது முகங்கள் இன்னும் யார் யாரோ! பண்டம் மலிந்தால் அரசியல் சந்தைக்கு வரத்தானே செய்யும் அப்போது புரிந்து கொள்வார்கள் தமிழ் மக்கள் தமிழ்ப் பிரமுகர்களின் பிரபலயத்தை.

எடுபிடிகள் கைகாட்களைத் துக்கொள்ளட்டும். தமிழர் விடுதலை முன்னனிக்கோ கூட்டுச்சேரா மாநாட்டுற்குமுன் நடைபெறவேண்டிய பணிகள் மலைபோலக் குவிந்துள்ளன.

இங்குள்ள தமிழர் பிரச்சினைகளைத் தமிழ்ஈழத்துக்கு அப்பால் கடல் கடந்த நாடுகளில் வாழும் தமிழ் ஈழத்தவருக்கு அறிவிக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பப்படுவதாக தமிழர் விடுதலை முன்னணிப் பொருளாளர் யா. உ. திரு. கி. கதிரவேற்பிள்ளை அறிவித்துள்ளார். அயல் நாடுகளில் வாழும் தமது உறவினர் நண்பர்களது முகவரிகளை ஒவ்வொரு தமிழ்ப் பேசும் மகனும், மகளும் திரு. கதிரவேற்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளது போல தமிழர் விடுதலை முன்னணி இணைச்செயலாளர்களான திரு. எம். சிவசிதம்பரம், திரு. அ அமிர்தலிங்கம் ஆகியோருக்கு உடனடியாக அறிவித்தல்வேண்டும்.

உலகத் தலைநகரங்களில் உள்ள தூதுவராலயங்கள் மாதம் இருமுறையாவது செய்தித் திரட்டுக்களைத் தயாரித்து தாம் வதியும் தலைநகரங்களிலும் நாடுகளிலும் சுற்றுவிநியோகம் செய்கின்றன. தகவல்களைப் பரிமாறுவதில் அது ஓர் அரிய சாதனமாகப் பயன்படுகிறது.

தமிழர் விடுதலை முன்னணியும் மாதம் இரு செய்தித்திரட்டுக்களைத் தூதுவராலயங்களுக்கும் செய்தித் தாபனங்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட உலக மொழிகளில் விநியோகிப்பது பயனளிக்கும். தூதுவராலயங்கள் செய்தித்திரட்டுக்களை அச்சேற்ற வியலாவிடத்து, தட்டச்சுப் பொறியால் அச்சுரு வெட்டி பின் பிரதிகள் எடுத்தே விநியோகிக்கின்றன. அப்படிச் செய்வதில் சிரமமிராது. தமிழர் விடுதலை முன்னணியினர்க்கும் முன்மாதிரி கடல்கடந்த நாடுகளிலுள்ள ஆதரவாளராலும் காலப்போக்கில் பின்பற்றப்படும்.

தமிழ் ஈழம் பிரச்சனை உலக மனச்சாட்சியை உறுத்த தகவல் தெரிய உதவும் சாதனங்களுக்கு உதவும் சகல மார்க்கங்களையும் பயன்படுத்த வேண்டும்.

[illegible] அலுவலர்கள் அமைப்பு யாழ். நகரில் நான்கு மனித உரிமைகள் தினக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. இக்

பட்ட கட்டுரைகளது பிரதிகளும் முன் கூறியதுபோல் விநியோகிக்கப்படுதல் வெளிநாட்டாரும் எமது பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள உதவுவதாக அமையும்.

வாராவாரம் தலைநகரில் நடைபெறும் கருத்தரங்குகளில் நிகழ்த்தப்படும் உரைகளும் உரையாடல் பற்றிய குறிப்புக்களுடன் பிரதியெடுக்கப்பட வேண்டுவதும் சுற்று விநியோகமாக வேண்டுவதும் பொருத்தமுடையதே! வருடம் ஒரு "மனித உரிமைகள்" கருத்தரங்கை நடத்தும் தலைநகர் ஆய்வுக் கழகம் இவ்வாண்டில் யூலை ஆகஸ்ட் மாதங்களில் மனித உரிமைகள் கருத்தரங்குகளைத் ஒரு தொடராகவே நடத்துவதும், படிக்கப்படும் கட்டுரைகளைப் பிரதியெடுப்பதும் நல்லது. உலக அபிப்பிராயப் பயன் கருதி ஜூலை ஆகஸ்ட் மாதங்களில் நடத்தும் கருத்தரங்குகளை ஆங்கிலத்திலே நடத்தலாம். எதிர்வரும் கூட்டுச்சேரா மாநாடு ரொடேசியா, தென் ஆபிரிக்க உள்ளடங்க உலக நாடுகள் பலவற்றில் இடம் பெறும் மனித உரிமைகள் மீதான அத்துமீறல்களுக்கு எதிரான ஒரு மனித உரிமைகள் கருத்தரங்காக அமைய வேண்டுமென்ற யூகோஸ்லாவிய குடியரசுத் தலைவர் மார்ஷல் டிட்டோ வெளியிட்ட அவர்களது வேணவா நிறைவேறக் களம் அமைத்துக் கொடுத்ததுபோல் அது அமையும்.

அயல் நாடுகளில் புலமை பரிசுப் படிப்பில் தேர்ச்சி பெற்று நாடு திரும்பியுள்ள தமிழர்களுக்கு சம்பந்தப்பட்ட நாட்டு மொழிகளில் ஏற்பட்டுள்ள தேர்ச்சி பயனற்று வீண்போகக்கூடாது. தமிழர் விடுதலை முன்னணியினர் தனியார் துறையில் உள்ள இப்படிப்பட்டவர்களுடனும், அரசாங்க சேவையால் இளைப்பாறியுள்ளவர்களுடனும் தொடர்பு கொண்டு அவர்களது பன்மொழிப் புலமையையும் இயக்கத்துக்குப் பயன்படுத்தவேண்டுவது அவசியம். உலகில் உள்ள எந்தவொரு மொழியையும் வாய்ப்பு நேரும்போது பயன்படுத்தப் பக்குவம் பெறுவோம்.

லண்டனிலும், நியுயோர்க்கிலுமுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினர் அவ்வாறு இயங்கத் தலைப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதில் உண்மையிருந்தால் அது வரவேற்கப்படத்தக்க நல்ல செய்தியே! அம் முயற்சியில் அவர்கள் வெற்றி பெற வாழ்த்துவதோடு அமையாது இங்குள்ள தலைவர்களும் அதே வழியில் செயல்படுவார்களாக. கூட்டுச்சேரா நாடுகள் மாநாட்டில் பார்வையாளராகக் கலந்து கொள்ள உலக விடுதலை இயக்கங்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன; குறிப்பாக பாலஸ்தீன விடுதலை இயக்கம், ஒலி விடுதலை. இயக்கம் போன்ற விடுதலை இயக்கங்களே அவை;

எதிர்வரும் கூட்டுச்சேரா மாநாடு உலக விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு. பொது மேடையாக அமைய வேண்டுமென்ற லிபியா குடியரசுத் தலைவர் கேணல் கடாபி அவர்களின் வேணவா. மேற்படி மாநாட்டிற்கு மேற்படி விடுதலை இயக்கங்கள் அழைப்பும் பெற்றதால் ஓரளவு பூர்த்திடைந்துள்ளது. கேணல் கடாபியின் அபிலாசை முழுமையாக நிறைவுபெற மேற்படி மாநாட்டில் தமிழர் விடுதலை முன்னணியும் பார்வையாளராக அழைப்புப் பெறல் வேண்டும். தமிழர் விடுதலை முன்னணி அவ்விதம் அழைப்பைப் பெறுவது உலக அரங்கில் தமிழ் ஈழப் பிரச்சனை சூடுபெறுவதைப் பொறுத்ததே! தமிழ் ஈழம் விடுதலை இயக்கங்கள் முஸ்லிம் நாடான லிபியாக் குடியரசுத் தலைவரின் கைகளை வலுப்படுத்த தீவிரமாக உழைக்க வேண்டும். கூட்டுச்சேரா நாடுகள் மாநாடு வெற்றிபெறுமாக!

— திரவியம்

---

## பிரச்சினைக்கு...

—4-ம் பக்கத் தொடர்

இன்று எவ்வளவோ வீழ்ச்சியுற்றுள்ளன. எனினும் சிங்கள அரசியலில் இவர் இன்னும் முக்கிய தலைவராக விளங்குகிறார். இன்னும் சில காலம் தலைமை வகிக்கப் போகும் இம் முதல் அமைச்சர் சிறுபான்மை மக்களுக்கு நீதி வழங்க உறுதி பூணின் செய்யத் தக்கவை பல உண்டு. இவருக்குப் பிரச்சினைகள் பல உண்டு. குறிப்பாக புத்த பிக்குவின் வடிவில் எதிர்ப்பு இவருக்குண்டு. எனினும் இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுகாண மன உறுதி பூணவேண்டும். கொழும்பில் இவர் அண்மையில் விடுத்துள்ள அறிக்கை, சிக்கல் நிறைந்த இப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் உண்மையில் தீர்வுகாண முயல்கிறார் என

---

பளிச்சிடும் வெண்மைக்கும், துரித சலவைக்கும்
பாவியுங்கள்

"கூடுதல் நீலம் கலந்த மில்க்வைற் சலவைப் பவுடர்"

நிறைந்த அளவில், குறைந்த விலையில்
எங்கும் கிடைக்கும்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

பீடம் சில சிங்கள சாதி வகுப்பினரை அடக்கி ஒடுக்கி வைத்ததே காரணமென்று பயங்கரவாத இயக்கத்தின் காரணத்தை ஆராய்ந்த பல்கலைக்கழக ஆய்வாளர் மொழிந்துள்ளனர்.

வரையில் அரசியலால் ஏமாற்றப்பட்ட தமிழினம் இன்று பெற்றுள்ள அரசியல் தெளிவை எவரும் மாற்ற முடியாது.

நாடற்றவர் பிரச்சினை பற்றியும் ஏதோ குழப்ப நிலையில் அமைச்சர் உளறியிருக்கும் கொண்டு தீர்ப்பதே எமது நோக்கம் வெறிபிடித்த சிங்கள அரசின் வசதிக்காக தமிழ் இனத்தை அளிப்பதற்கு நாம் ஆயத்தமில்லை.

மலையகத் தமிழ் அரசியல் பீடத்திற்கும் எமக்கும் மிடையேயேதோ பெரும் கரு

# முதலைக் கண்ணீர் வேண்டாம்

# முதலில் தம்மை உணரட்டும்!

## ஆடு நனைய ஓநாய் அழுத கதை
## அமைச்சர் ஹரிசனரில் காட்டும் அக்கறை!

"தமிழ் தீவிரவாதிகள் விரும்புவதுபோல் வடகிழக்கு பகுதிகளில் தமிழ் இராச்சியம் ஒன்று ஏற்பட்டால்'' என்று தன் பேச்சின் முதற் பகுதியிலேயே குறித்திருப்பது, தமிழ் இராச்சியம் தோன்றுவதை எவரும் தடுக்கவோ, தவிர்க்கவோ முடியாது என்பதை அமைச்சர் மறைமுகமாக ஏற்றுக்கொண்டதற்கு நாம் முதல் நன்றி செலுத்துவோமாக.

தமிழ் இராச்சியம் தோன்றினுல் ஹரிஜன மக்கள் கோவிலுக்குச் செல்லவோ அல்லது கிணற்றில் நீர் அள்ளவோ முடியாது என அமைச்சர் கூறும் கூற்று எள்ளி நகையாடத்தக்க வீண் பிதற்றல் மொழியாகும். தமிழ் ஹரிஜன மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடிக்கும் இலங்கரத்தினுவுக்கு மல்வத்த புத்த தலைமைப்பீடம் என்றும் கொய்கம சாதியினருக்கே வழங்க வேண்டுமென்ற சட்டத்தைப்பற்றி என்னகூற விரும்புகிறார். புத்த பெருமானைப் போல் சாதியைச் சாடி சாகடித்த பெருமக்கள் ஏனையோரைக் காண்பது அரிது. அந்த புத்ததருமத்தை கடைப்பிடிப்பதாக கூறும் இந்த அரசும், இந்த பௌத்த தலைமைப்பீடமும் சாதிவெறி தலைக்கேறிய நிலையில் செயற்படுவதற்கு என்ன விளக்கம் கூறமுடியும்? முதலில் உன்னைத் திருத்திக்கொண்டு உலகைத் திருத்த நினையென்று எச்சரிக்க விரும்புகின்றோம். மேற்குறித்த நிகழ்ச்சிகள் மட்டுமல்ல ரொடியா, பதுவ போன்ற பெயர் தாங்கிய பல சாதிமக்களை மிகத் தாழ் நிலையில் வைத்திருக்கும் சிங்கள இனமும், அரசியல் தலைமைப்பீடமும் தமிழ் இனத்தவர்களிடையே அழிந்து கொண்டுவரும் சாதிப் பிரச்சனையைப் பெரிதாக்கி அரசியல் இலாபம் காண்பதற்கு நாம் இடம் கொடுக்கப் போவதில்லை.

1971இல் ஏற்பட்ட பயங்கரவாத இயக்கத்தின் அடித்தளம்கூட சிங்கள அரசியல்

தமிழ் சமுதாயத்தில் சாதி வெறி மருந்தளவும் தலை தூக்கக்கூடாது என்ற பெரு நோக்கோடு சிங்கள அரசினுல் உருவாக்கப்பட்ட அரசியல் அமைப்பில் சமூக குறைபாடுகளை நீக்கும் சட்டத்தையும் இணைக்க வேண்டுமென்று தமிழரசுக் கட்சி கொண்டுவந்த கோரிக்கையை முற்றுக நிராகரித்த சிங்கள அரசு இச் சாதிப் பிரச்சனையை வைத்துக் கொண்டு தமிழினத்தை அடக்கி ஒடுக்க என கனவு காண்கிறது. சாதி, மதம், மாகாணம் கடந்த நிலையில் ஒன்றுபட்ட தமிழினம் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்து எழுப்பும் ஒரே குரல் — அகில உலகம் எங்கும் கேட்கும் குரல்— வட்டுக் கோட்டை மாநாட்டின் தீர்மானமே எங்கள் உயிர் மூச்சு என்பதேயாகும். பிரச்சனையை மூடி மறைப்பதினுலோ அதனை வேறு திசையில் திருப்புவதினுலோ தமிழரை எதிர்நோக்கும் பிரச்சனையைத் தட்டிக் கழிக்க முடியாது இதுகால

கிறார். அவர் விரும்பியபடி நாடற்றவருடைய பிரச்சனை தீர்க்கப்படவில்லை. என்பது அமைச்சருடைய அங்கலாய்வு. மலையகத் தமிழ்மக்களுடைய பிரச்சனையை இரண்டு விதமாகத் தீர்க்கலாம். (1) பிரச்சனையை உணர்ந்து அவர்களுக்கு வாழ்வளிக்கும் முறையில் பிரச்சனையைத் தீர்ப்பது, இவ்விதம் பிரச்சனை தீர்க்கப் படுவதையே தமிழர்களாகிய நாம் விரும்புகிறோம். (2) மனிதாபிமான முள்ள எந்த மனிதனும் அப்படித் தான் விரும்புவான். ஆனல் வெறிபிடித்த இவ்வரசோ பிரச்சனைக்குரிய மலையக தமிழ் மக்களின் பிரச்சனையைத் தீராது, பிரச்சனைக்குரியவர்களைத் தீர்த்துக் கட்ட முயல்கிறது. இந்த வெறியாட்டத்திற்கு நாம் உடந்தையாக இருக்க மறுக்கிறோம்; வேறு சொற்களில் கூறின் அரசாங்கம் விரும்புவதுபோல் கட்டாயத்தின் பேரில் இவர்களை கப்பலில் கட்டி அனுப்புவதற்கு நாம் ஆயத்தமில்லை. மனிதர் பிரச்சனையை மனித இரக்

த்து வேறுபாடு இருப்பதாக கூறி எம்மை மேலும் பிரிக்கும் சதி முயற்சியில் அமைச்சர் ஈடுபட முயல்கிறார். எம்மிடையேயுள்ள சிறு வேறுபாடுகளை எம்மால் தீர்த்துக் கொள்ளுகின்ற ஆற்றல் எமக்குண்டு. எம்மை அழித்தொழிக்கும் வெளியார் பிரச்சனையில் தலையிடுவதையோ, நீலிக்கண்ணீர் விடுவதையோ நாம் ஏற்கப் போவதுமில்லை கவலைகொள்ளப்போவதுமில்லை.

அன்றைய பிரித்தானிய ஏகாதிபத்தியம் சேர் பட்டங்களையும், ரெவிறின் பட்டங்களையும் கொடுத்து தமிழினத்தை விலைக்கு வாங்க முயன்ற நிகழ்ச்சியை வரலாற்று உணர்வுமிக்கோர் அறிவர். அதை ஏகாதிபத்திய நோக்கு வழங்கப்பட்ட இந்த அரசு சமாதான நீதவான் பட்டங்களைக் கொடுத்து தமிழினத்தின் ஒரு பகுதியினை வாங்க முயல்கிறது. இது பகற்கனவாக முடியும் என்பதை அரசு உணரும். [இச்செய்திக்கு ஆதாரம் வீரகேசரி வார வெளியீடு 13.6.76];

# பிரச்சினைக்கு காரணம் ஆட்சியாளரே!

# இப்படிக் கூறுகிறது 'இன்டியன் எக்ஸ்பிரஸ்'!

இலங்கையில்பெரும்பான்மையான தமிழ்மக்கள் வதிவதன் காரணமாக எழுந்துள்ள பிரச்சினைகளை போர்க்கோலச் சூழ்நிலையில் தீர்க்க முடியாது. மாறுகவிட்டுக்கொடுத்து இருபுறமக்களிடையும் நம்பிக்கையின் அடிப்படையில் தீர்க்க வேண்டுமென்ற இலங்கை முதல் அமைச்சரின் கூற்று அரசியல் ஞானம் படைத்தவரின் கூற்றுக விளங்குகிறது. ஆனல் இது நடைமுறைக்கொவ்வாத வெறும் நம்பிக்கைக்கூற்றுவோ அல்லது அழகுமிகு சொல் அடுக்காகவோ விளங்காது நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு திருமதி பண்டாரநாயகாவிற்குரியது. இக்கூற்று தமிழர் விடுதலை முன்னணியின் நான்கு தலைவர்களைச் சிறையில் அடைத்ததையடுத்து சில நாட்களின் பின் கூறப்பட்ட கூற்றுகும். சிறையில் தலைவரை அடைக்கும் இச்செயல் வன்முறை கொண்டு பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் ஆயத்தம் செய்கிறதோ என எண்ண இடமளிக்கிறது. ஆனல் முதலமைச்சரின் மேற்குறித்த கூற்று எழுந்துள்ள பிரச்சினையை அமைதியான அடிப்படையில் அரசுதீர்க்கமுயல்கிறது என்ற நம்பிக்கையையே எமக்கு மீண்டும் தருகிறது.

இலங்கையிலுள்ள தமிழருக்கெதிராக இலங்கை அரசு என்னதான் எதிர்ப்பான கருத்துக்களைக்கொண்டிருப்பினும் இப் பிரச்சினையைத் தோற்றுவித்தவர்கள் தமிழர்கள்தான் என்று அரசாங்கம் குற்றம் கூற முடியாது. 1948இல் இத்தீவு விடுதலை அடைந்த நாள் தொட்டு முக்கிய சிறுபான்மையினம் தனக்குரிய [illegible] யான உரிமைகளுக்காகக் குரல் எழுப்பியபடியே இருக்கிறது இவ் உரிமைக் குரல் எழுப்பப்படும் காலங்களிலெல்லாம் [illegible] ஆனல் அவ் வாக்குறுதிகள் என்றுமே நடைமுறைப் படுத்தப்படவில்லை. அல்லது இதற்கு மாறுக தமிழ் இனத்தின் இன உணர்வைத் தூண்டும் முறையிலான சட்டங்களையே அரசாங்கம் இயற்றியுள்ளது. அண்மையில் தமிழர் விடுதலை முன்னணி என்ற கவர்ச்சிமிகு பெயரில் இணைத்து ஒரு புதிய வடிவினை மேலும் பெற்றுள்ளது இவ்வணி தனி நாட்டுக்கோரிக்கையினை விடுத்துள்ளது. தமிழ்த்தொழிலாளிகளில் செல்வாக்குள்ள ஒரு பகுதியினர் இக்கோரிக்கையைச் சரியான முறையில் எதிர்த்துள்ளனர் எனினும் தமிழர் விடுதலை முன்னணிக்குப்பின் எழுந்துள்ள சக்தியை பேராற்றலை கொழும்பு அரசியல்பீடம் உணராமலிருக்க முடியாது சில நாட்களுக்கு முன்புதான் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பொதுவுடைமைக்கட்சி தமிழ்த் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டுமென வேண்டுகோள் விட்டதனை நாம் மறப்பதற்கில்லை.

இலங்கை ஒரு சிறு தீவு அதன் பழைய வரலாறு எவ்வாறிருப்பினும் தனித்தனியே முழு இறைமை பெற்ற இரு நாடுகளை அது உள்ளடக்க முடியாது. சிங்களவரும் தமிழரும் ஒன்றுயிருக்கப்பழகிக்கொள்ளவேண்டும். தமிழர்களுக்கு உரிமை வழங்கப்பட்டால்தான் இது முடியும். இப்பிரச்சினைக்கு திருமதி பண்டாரநாயகாவே முடிவு காணமுடியும். இவருடைய அதிகாரங்கள்

—3-ம் பக்கம் பார்க்க

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜூன் மாதம் 16-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org